**செய்தி வெளியீடு எண்: 070** **நாள்: 27.01.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.1.2018) சென்னையில் நடைபெற்ற “Master Class in Liver Diseases 2018” கருத்தரங்கில் கலந்து கொண்டு அற்றிய உரை**

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு

சிறப்பான கருத்துக்களை வழங்கிய

மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர்

டாக்டர். சி.விஜயபாஸ்கர் அவர்களே !

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

முதன்மைச் செயலாளர்

டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களே !

உடல் உறுப்பு தான ஆணையத்தின் உறுப்பினர் செயலர்
டாக்டர் பாலாஜி அவர்களே !

டாக்டர் ரவீந்திரநாத் அவர்களே !

பேராசிரியர் முகம்மது ரீலா அவர்களே !

டாக்டர் ரமேஷ் கிருஷ்ணன் அவர்களே !

பல்வேறு வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கும் பேராசிரியர்களே ! மருத்துவர்களே !

இந்த இனிய விழாவில் கலந்து கொள்ள

வந்திருக்கும் அனைவருக்கும் என்னுடைய

நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு,

‘சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்’

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பார்கள்.

உடல் நோய் இல்லாதவர்கள்

மன வளம் மிக்கவர்களாக இருப்பார்கள்.

மன வளம் மிக்கவர்களால் தான்

ஒரு நாட்டின் மனித வளம் பெருகும்.

இன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே
மனித வளம் மிக்க ஒரு முன்னோடி மாநிலமாகவும்,
முன்மாதிரி மாநிலமாகவும் திகழ்ந்து வருகிறது.
அதற்கு அடிப்படைக் காரணம் சுகாதாரம் தான்.

எனவே, அரசுத் துறைகளிலேயே,
சுகாதாரத் துறை என்பது
மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.
தாய்சேய் மற்றும் குடும்ப நல சேவைத் திட்டங்களை
செயல்படுத்துவது மற்றும்
உயர்தர மருத்துவ சேவைகளை
வழங்குவது மட்டுமல்லாமல்,
மிகச் சிறந்த மனிதவளம் மற்றும்
கட்டமைப்பை ஏற்படுத்துவதிலும்
இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாக
தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது.
நம் மாநிலத்தில் அனைவருக்கும்
சமமான, எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும்
தரமான சுகாதார சேவையை
மக்கள் நல்வாழ்வுத் துறை மக்களுக்கு வழங்கி வருகிறது.

ஐக்கிய நாடுகளின் மில்லினியம் வளர்ச்சி இலக்குகளை
ஏற்கனவே தமிழ்நாடு அடைந்த நிலையில்,
மற்ற மாநிலங்களுக்கு முன்னதாகவே
தேசிய இலக்குகளையும் அடைந்துள்ளது.
2030-க்குள் அடைய வேண்டிய
நிலையான வளர்ச்சி இலக்குகளை

முன்னதாகவே அடைய

முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இதன் காரணமாகவே வளர்ந்த நாடுகள் அடைந்துள்ள

சுகாதார குறியீடுகளை, 2023-ஆம் ஆண்டுக்குள்

அடைய வேண்டும் என்ற இலக்கு,

மாண்புமிகு இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களால்

வெளியிடப்பட்ட “தொலைநோக்கு திட்டம் 2023”-இல்

விவரிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால்

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக

உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையம்

உருவாக்கப்பட்டது.

**இந்தியாவில் உயரிய மருத்துவ சேவை பெற**
**வசதியுள்ள இடமாக தமிழ்நாடு கருதப்படுகிறது.**

தமிழ் நாட்டில் அரசு மருத்துவமனைகளின் மூலம்

இலவசமாக உடல் உறுப்பு மாற்று சிகிச்சை

செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தனியார் மருத்துவமனைகளில்

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்

திட்டத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த சிகிச்சைக்காக 35 லட்சம் ரூபாய் வரை

தமிழ்நாடு அரசு  பயனாளிகளுக்கு வழங்கி வருகிறது.

இந்தியாவிலேயே உடல் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக

**அதிகமான தொகை வழங்கும் மாநிலம்**

**தமிழ்நாடு மட்டும் தான்.**

உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின்
தேவைப்படும் விலை அதிகமான
எதிர்ப்புச் சக்தியை ஒடுக்கும் மருந்துகள்
தமிழ்நாட்டில் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது.

இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு
உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை
மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவதில்,
நாட்டிலேயே முதன்மை மாநிலத்திற்கான
**தேசிய விருதினை தொடர்ந்து மூன்றாவது முறையாக**
**தமிழ்நாடு பெற்றுள்ளது** என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் சென்னையில் நடந்த விழாவில்
இந்தியாவிலேயே முதன் முறையாக
1000 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளை
வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளதை பாராட்டி
மாண்புமிகு இந்திய துணை குடியரசுத் தலைவர் அவர்கள்
தமிழ்நாடு அரசிற்கு விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இதுவரை 6,097 உடல் உறுப்புகள்
1,082 கொடையாளர்களிடமிருந்து
தானமாக பெறப்பட்டுள்ளது.

மூளைச்சாவு அடைந்த ஒருவரிடமிருந்து எடுக்கப்பட்ட
இதயம், இதய வால்வு, இரத்தக் குழாய், நுரையீரல்,

கல்லீரல், கணையம், சிறுகுடல், தோல்,
சிறுநீரகங்கள், கண்கள் உள்ளிட்ட உறுப்புகள் மூலம்
குறைந்தது 9 பேர்களுக்கு வாழ்வளிக்க முடியும்.

உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையத்திற்காக
தனியாக இணையதளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
உடல் உறுப்பு தானம் செய்ய விருப்பம் உள்ள நபர்கள்
ஆன்லைன் மூலமாக மிக எளிதாக பதிவு
செய்து கொள்ளும் செயலி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின்
நல்லாசியுடன் 2016ஆம் ஆண்டு
சீரமைக்கப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கில்
மேற்கொள்ளப்பட்ட கல்லீரல் மாற்று அறுவை
சிகிச்சைகள் அனைத்தும் 100 சதவீத வெற்றியுடன்
செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.
இதுவரை 24 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள்
அரசு ஸ்டான்லி மருத்துவமனையின்
கல்லீரல் சிறப்பு மையத்தில் செய்யப்பட்டுள்ளன.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை
இம்மருத்துவமனையில் தொடங்குவதற்கு
குளோபல் மருத்துவமனையுடன்
புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
உலகப் புகழ்பெற்ற கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை
நிபுணர் **முகமது ரேலா** அவர்களைக் கொண்டு
ஸ்டான்லி அரசு மருத்துவமனை
மருத்துவர்களுடன் இணைந்து

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் அனைத்தும்
100 சதவீத வெற்றியுடன்
செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

20 ஆண்டுகளுக்கு முன்பாக
அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பேபன் சுட்கே என்ற
5 நாள் பெண் குழந்தைக்கு
லண்டனில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை
**முகமது ரேலா** அவர்களால் செய்யப்பட்டது.
தற்போது மேடையின் முன்பு அனைவரின் முன் எந்த அளவிற்கு உடல் தகுதியோடு இருக்கிறார் என்பதை நம் கண்முன் பார்த்தோம். அவர் தற்போது சட்டம் பயின்று வருகிறார்.

அவசர கால ஊர்தியின் மூலம்
உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக
கொடையாளரிடமிருந்து தேவைப்படுவோருக்கு
நல்ல நிலையில் உறுப்பை விரைந்து வழங்கிட
பசுமை வழித்தடம் **(Green Corridor)**
போக்குவரத்துத் துறையின் மூலமாக
அமைக்கப்பட்டு வருகிறது.
இந்தப் பணியில் காவல் துறையின் பங்கு மகத்தானது.

உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில்,
மருத்துவத் துறையை சார்ந்த
அறுவை சிகிச்சை நிபுணர் குழுவினர்,
ஆலோசகர்கள், ஒருங்கிணைப்பாளர்கள்,
மோகன் பவுண்டேஷன், நியாஸ் பவுண்டேஷன்,
டாங்கர் பவுண்டேஷன் போன்ற

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்

பங்களிப்பு மகத்தானது.

தொடர்ச்சியான செயல்பாடுகள் மூலம்

உறுப்பு தானத்தில் தமிழ்நாடு

இந்தியாவிலேயே முன்மாதிரியான மாநிலமாக

தொடர்ந்து விளங்கும் என்பதில்

சிறிதளவும் சந்தேகமில்லை.

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை அருகில் கிராமத்தில் பிறந்து விடாமுயற்சியால் ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவ பட்டப்படிப்பு மேற்கொண்டு உலக அளவில் இன்றைக்கு சிறந்த மருத்துவ நிபுணராக விளங்கிக் கொண்டிருக்கின்ற டாக்டர் ரீலா அவர்களை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவருடைய சேவை இன்றைக்கு நாட்டிற்கு நலம் அளித்துக் கொண்டிருக்கின்றது. மகத்தான டாக்டர் ரீலா அவர்கள் தமிழகத்திற்கு பெருமை சேர்த்திருக்கின்றார்கள். அவரை இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உடல் உறுப்பு தானத்தை ஒரு மக்கள் இயக்கமாகவே மாற்றுவதற்கு

அனைவரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

இந்த இனிய விழாவிற்கு

வருகை வந்திருக்கும் அனைவருக்கும் மற்றும்

இந்த விழாவினை ஏற்பாடு செய்த அனைவருக்கும்

என்னுடைய மனமார்ந்த

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**